**செய்தி வெளியீடு எண் : 1870** **நாள் : 26.10.2022**

## செய்தி வெளியீடு

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் புகைப்பட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 01.01.2023 தேதியினை தகுதியாக கொண்டு அறிவிக்கப்பட்டுள்ளது

2. இப்பணிகளை கண்காணிக்கும் பொருட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் 10 மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை வாக்காளர் பட்டியல் பார்வையாளராக நியமனம் செய்துள்ளது. இவ்வாக்காளர் பட்டியல் பார்வையாளர்கள் சுருக்க முறை திருத்தப் பணிகளை, அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு குறைந்தது மூன்று முறையாவது பயணம் மேற்கொண்டு, மேற்பார்வையிட்டு, அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் கூட்டங்களை நடத்துவதோடு, பொதுமக்களைச் சந்தித்தும் வாக்காளர் பட்டியல் சார்ந்த புகார்கள் குறித்தும் ஆய்வு செய்வர். அவர்களின் ஆய்வுக்குப் பின்னர், தேர்தல் ஆணையத்திற்கு அறிக்கையை அனுப்புவர்.

3. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்பேரில் வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களுடன் கலந்தாய்வு கூட்டத்தினை தலைமைத் தேர்தல் அதிகாரி இன்று (26.10.2022) நடத்தினார்.

4. வாக்காளர் பட்டியல் பார்வையாளர்களின் பெயர், பதவி மற்றும் விவரங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்கள் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | மாவட்டங்கள் |
|---|---|---|
| 1 | திரு. அதுல் ஆனந்த் , இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர். | சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு |
| 2 | திரு. அனில் மேஷ்ராம், இ.ஆ.ப., ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம். | காஞ்சிபுரம், வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை , திருவண்ணாமலை |
| 3 | திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம். | விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் |
| 4 | திருமதி. வெ. ஷோபனா, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம். | கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம் |
| 5 | முனைவர். மா. வள்ளலார், இ.ஆ.ப., ஆணையர், துணிநூல் ஆணையரகம் | அரியலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, பெரம்பலூர் |

| | | |
|---|---|---|
| 6 | திரு. த. ஆபிரகாம், இ.ஆ.ப.,<br>அரசு சிறப்புச் செயலாளர்,<br>வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை. | தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை |
| 7 | திரு. சு. சிவசண்முகராஜா, இ.ஆ.ப.,<br>தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,<br>பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். | கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, நாமக்கல் |
| 8 | முனைவர். சி. நா. மகேஸ்வரன்,<br>மேலாண்மை இயக்குநர்,<br>அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம். | திருப்பூர், கரூர், தேனி, திண்டுக்கல் |
| 9 | முனைவர். (திருமதி) ப. மகேஸ்வரி, இ.ஆ.ப.,<br>அரசு சிறப்புச் செயலாளர்,<br>குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை. | மதுரை, சிவகங்கை, விருதுநகர், ராமநாதபுரம் |
| 10 | திருமதி. ச. ஜெயந்தி, இ.ஆ.ப.,<br>கூடுதல் ஆணையர்,<br>நில நிர்வாக ஆணையரகம். | தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி ,கன்னியாகுமரி |

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in